செ.வெ.எண்:40 நாள்:21.10.2021

**மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பி.கீதாஜீவன் அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் ஆகியோர் தலைமையில் குழந்தை திருமணம் தடுப்பு குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் மற்றும் குழந்தை திருமணம் தடுப்பு, இளம் வயது கர்ப்பத்தினால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு பயிற்சி கருத்தரங்கம் இன்று (21.10.2021) நடைபெற்றது.**

**மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் குழந்தை திருமணம் தடுப்பு குறித்து 13 வகையான விழிப்புணர்வு பதாகைகளை வெளியிட்டார்கள்.**

**கொரோனாவால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த செய்தியாளர் திரு.ரபிநேரு அவர்களின் குடும்பத்தினருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.10 இலட்சத்திற்கான காசோலைகளை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் வழங்கினார்கள்.**

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குழந்தை திருமணம் நடைபெறுவதை தடுக்க பொதுமக்கள் 1098, 1091 மற்றும் 181 ஆகிய எண்கள் மூலம் தகவல் தெரிவிக்கலாம் என மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பி.கீதாஜீவன் அவர்கள் தகவல்.**

**குழந்தை திருமணம் நடத்துபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்தும், சட்டத்தை மீறுபவர்கள் இரும்பு கரம் கொண்டு அடக்கப்படுவார்கள் என மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் அவர்கள் தகவல்.**

கிருஷ்ணகிரி, தேவராஜ் மஹாலில் மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பி.கீதாஜீவன் அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் ஆகியோர் தலைமையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை முதன்மைச் செயலாளர் திரு.ஷம்பு கல்லோலிகர் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., சமூக பாதுகாப்புத்துறை இயக்குநர் திருமதி.எஸ்.வளர்மதி இ.ஆ.ப., சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை இயக்குநர் திருமதி.த.ரத்னா இ.ஆ.ப., நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் அ.செல்லகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஒய்.பிரகாஷ் (ஓசூர்), திரு.டி.மதியழகன் (பர்கூர்) ஆகியோர் முன்னிலையில் இன்று (21.10.2021) குழந்தை திருமணம் தடுப்பு குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் மற்றும் குழந்தை திருமணம் தடுப்பு, இளம் வயது கர்ப்பத்தினால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு பயிற்சி கருத்தரங்கம் நடைபெற்றது.

**மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பி.கீதாஜீவன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு, வளர்ச்சி மற்றும் அவர்களின் மேம்பாட்டிற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள். தமிழ் சமுதாயத்தை, பெண்கள் எதிர்காலத்தை பாதிக்க கூடிய ஒன்று குழந்தை திருமணம். இந்த குழந்தை திருமணத்தினால் கல்வி மற்றும் எதிர்காலம் பாதிப்படைகிறது. பெண்கள் மற்றும் பெண்குழந்தைகளுக்கு ஏற்படும் வண்கொடுமைகளான பாலியல் தொந்தரவு, பாலியல் சீண்டல்கள் மற்றும் சமுதாயத்தின் தீய சக்தியாகவும், சமுதாயத்தின் வளர்ச்சியை பாதிக்க கூடியதாக விளங்கும் பெண் சிசுகொலை தடுக்கவும் பயிற்சி பட்டகை மாநில அளவில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முதன் முதலாக துவக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக அனைத்து மாவட்டம், ஒன்றியம், கிராம அளவிலும் இந்த பயிற்சி பட்டகை தொடர்ந்து நடத்தப்படும்.

கிராம நிர்வாக அலுவலர், ஊராட்சி தலைவர் ஆகியோர் ஒரு இடத்தில் குழந்தை திருமணம் நடைபெறுவதை தடுத்து, அதனால் ஏற்படும் தீமைகளை எடுத்துரைக்க வேண்டும். 18 வயது நிறைவடைந்த பிறகு தான் திருமணம் நடத்த வேண்டும், இல்லையென்றால் அது சட்டப்படி குற்றம் என்று பொதுமக்களிடம் எடுத்து கூற வேண்டும். குழந்தை திருமணம் நடைபெறுவதை தடுக்க பொதுமக்கள் 1098, 1091 மற்றும் 181 ஆகிய எண்கள் மூலம் தகவல் தெரிவிக்க வேண்டும்.

கொரோனா நோயால் பாதிக்கப்பட்டு பெற்றோர்களை இழந்த 200 குழந்தைகளுக்கு ரூ.5 இலட்சம், தாய் அல்லது தந்தையை இழந்த 5290 குழந்தைகளுக்கு ரூ.3 இலட்சம் குழந்தைகளின் பெயரில் காசோலை வழங்கப்பட்டுள்ளது. பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 5000 நபர்களுக்கு 18 வயது பூர்த்தியடைந்த முதிர்வுத்தொகை வழங்கப்பட்டுள்ளது. பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட 103 குழந்தைகளுக்கு இழப்பீட்டுத்தொகை வழங்கப்பட்டுள்ளது. போதைப் பழக்கத்திலிருந்து பெண் குழந்தைகளை பாதுகாக்கும் பொருட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் போதை தடுப்பு மையம் அமைக்கப்படும். 12 ஆம் வகுப்பு படித்த மாணவியர்கள் மேலும் 1 வருட படிப்பில் தாங்கள் விரும்பிய துறையில் சேர சமூக நலத்துறை மூலம் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். பெண்களின் வேலைவாய்ப்பிற்காக 40 சதவிகிதம் இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் அனைவரும் குழந்தை திருமணத்தை தடுத்து, பெண் கல்வியை ஊக்குவித்து பெண்களின் முன்னேற்றத்தில் சிறப்பான மாவட்டமாக கிருஷ்ணகிரி மாவட்டத்தை உருவாக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பி.கீதாஜீவன் அவர்கள் தெரிவித்தார்.

**மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:**

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் சமூக நலத்துறை சார்பில் 1989 மூவலூர் இராமமிர்தம் திருமண உதவித்தொகை திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றை கிருஷ்ணகிரியில் துவக்கி வைத்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆகஸ்ட் 5 ஆம் நாள் கிருஷ்ணகிரி மாவட்டம், சாமனப்பள்ளி கிராமத்தில் மக்களைத் தேடி மருத்துவம் என்ற திட்டத்தை துவக்கி வைத்தார்கள். தொடர்ந்து, தமிழ்நாட்டிலேயே கிருஷ்ணகிரியில் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் இளம் வயது திருமணம், இளம் வயது கர்ப்பத்தினால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு பயிற்சி அரங்கம் தொடங்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2015 ஆம் ஆண்டு 246 குழந்தை திருமணங்கள் 0.9 சதவிகிதமாகவும், 2016 ஆம் ஆண்டு 352 குழந்தை திருமணங்கள் 1.2 சதவிகிதமாகவும், 2017 ஆம் ஆண்டு 572 குழந்தை திருமணங்கள் 2.1 சதவிகிதமாகவும், 2018ஆம் ஆண்டு 676 குழந்தை திருமணங்கள் 2.2 சதவிகிதமாகவும், 2019 ஆம் ஆண்டு 650 குழந்தை திருமணங்கள் 2.2 சதவிகிதமாகவும், 2020 ஆம் ஆண்டு 830 குழந்தை திருமணங்கள் 2.8 சதவிகிதம் நடைபெற்று உள்ளது. எனவே குழந்தை திருமணத்தை தடுக்க பொதுமக்களிடம் பல்வேறு விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பெட்டமுகுலாளம் ஊராட்சி, காமகிரி கிராமத்தில் 26.07.2021 அன்று மலைவாழ் மக்களுக்கு குழந்தை திருமண முறை ஒழிப்பு குறித்து விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. கடந்த இரண்டு மாதத்தில் குழந்தை திருமணம் வெகுவாக குறைந்துள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள பையனப்பள்ளி, குந்தாரப்பள்ளி, பாஞ்சாலியூர் மற்றும் மேல்சோமார்பேட்டை ஆகிய கிராமங்களில் உள்ள மக்களிடம் கொரோனா தடுப்பூசி பணிகள், மக்களைத் தேடி மருத்துவப் பணிகளையும், இளம் வயது திருமணத்தால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்தியாவிலேயே தனியார் மருத்துவமனைகள் மூலம் கூடுதலாக கொரோனா தடுப்பூசிகள் இலவசமாக போடப்பட்ட முதல் மாவட்டமாக கிருஷ்ணகிரி மாவட்டம் விளங்குகிறது. சமூக பொருளாதார மேம்பாட்டு நிதியின் மூலம் கொரோனா தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் குழந்தை திருமணம் தடுப்பு குறித்து விழிப்புணர்வு 1 மாதத்திற்கு நடத்தப்படும். கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் ஜூலை 2021 மாதத்தில் 80 குழந்தை திருமணங்கள் நடைபெற்றுள்ளது. குழந்தை திருமணத்தால் ஏற்படும் தீமைகள் குறித்து பல்வேறு விழிப்புணர்வு ஏற்படுத்தியதால் தற்போது செப்டம்பர் 2021 மாதத்தில் 38 ஆக குறைந்து உள்ளது என மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து, மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பி.கீதாஜீவன் அவர்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் ஆகியோர் கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், குண்டலப்பட்டி ஊராட்சியில், குழந்தை திருமணம் தடுப்பு, இளம் வயது கர்ப்பத்தினால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி துவக்கி வைத்து, பார்வையிட்டனர். பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இ.சாய் சரண் தேஜஸ்வி இகாப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.செ.ராஜேஸ்வரி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கோ.மலர்விழி, கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் திரு.சதீஸ்குமார், மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி.மணிமேகலை நாகராஜ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.வெற்றிசெல்வன், திரு.சுகவனம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.செங்குட்டுவன், திரு.முருகன், இணை இயக்குநர் (நலப்பணிகள்) மரு.பி.பரமசிவன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.பி.மகேஸ்வரி, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.வி.கோவிந்தன், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.ப.பூங்குழலி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு திரு.சரவணன், மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் மரு.வெங்கடேஷ் மற்றும் சமூக நலத்துறை இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், வட்டார மருத்துவ அலுவலர் மரு.தமிழ்செல்வி வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.அசோகன், ஒன்றியக்குழு துணை தலைவர் திருமதி.சசிகலா தசரா, ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.ரோஜா காளியப்பன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**